தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 193/மா/2024**

**நாள்: 22.10.2024**

திருவாளர்கள் M.ஜாகீர் உசேன், மற்றும் ........ மனுதாரர்கள்
ர.சாஜித் பாஷா,
சென்னை–30.

மண்டல அலுவலர், ........ எதிர்மனுதாரர்
மண்டலம் 7,
பெருநகர சென்னை மாநகராட்சி.

சென்னை, புனித ஜார்ஜ், கான்வென்ட் தெரு, பழைய எண்.4/11, புதிய எண்.24 என்ற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் M.ஜாகீர் உசேன், மற்றும் ர.சாஜித் பாஷா என்பவர்களின் 26.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்றத்தால் 27.09.2024 அன்று பெறப்பட்டு, 193 /மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை, புனித ஜார்ஜ், கான்வென்ட் தெரு, பழைய எண்.4/11, புதிய எண்.24 என்ற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் M.ஜாகீர் உசேன், மற்றும் ர.சாஜித் பாஷா என்பவர்களின் 26.09.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளனர்.

“மனுதாரர்கள் தாங்கள் சமூக ஆர்வலர்களாக இருப்பதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7க்கு உட்பட்ட வார்டு – 83ல் சென்னை–99, கொளத்தூர், எமரால்ட் தெருவில் உள்ள கதவு எண்.37 சம்பந்தமாக அந்த கட்டிடத்தின் தகவல்களை கேட்டு 28.01.2023–ல் இந்திய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு அளித்தோம் என்றும் அதற்கு பதில் அனுப்பிய பொது தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர், மண்டலம்–7, அவர்கள் “மனுதாரர் குறிப்பிடும் கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் கட்டிட உரிமையாளருக்கு “தாக்கீது” வழங்கப்பட்டுள்ளது என்றும் கட்டிட உரிமையாளரிடம் 15 நாட்களுக்குள் கட்டிட மற்றும் வரைபடம் பெற்றவுடன் தாங்கள் கோரும் கேள்விகளுக்கு பதிலனுப்பப்படும்” என்று தகவல் அளித்தார் என்றும் இந்த தகவலின் மீது சந்தேகம் இருந்ததால் நாங்கள் “தாக்கீது” நகலை சான்று ஒப்பமிட்டு அளிக்க வேண்டும் என்று இந்திய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு அளித்தோம். ஆனால் அதற்கு கட்டிட உரிமையாளர் நகல்களை வழங்க ஒப்புதல் அளித்தால் நாங்கள் நேரில் அலுவலக நேரத்தில் வந்து

பார்வையிடலாம் என்று பதில் அனுப்பியிருந்தார். மேலும் "சொத்துவரி" சம்மந்தமான விவரங்களை வருவாய்த் துறையில் நேரில் அணுகி பெற்றுக் கொள்ளலாம் என்று பதில் அளித்தார் என்றும் மனுதாரர் கோரிய வருவாய்த்துறை மற்றும் சொத்துவரி சம்மந்தப்பட்ட கணினி பதிவுகளை ஆய்வு செய்ததில் கதவு எண்.37. எமரால்ட் தெரு, கொளத்தூர், சென்னை--99 முகவரி சம்பந்தப்பட்ட "சொத்துவரி'' தொடர்புடைய பதிவுருகள் ஏதும் இல்லை என ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் சரியான முழுமையான முகவரி அளிக்கும் பட்சத்தில் தகவல்கள் வழங்க ஆவண செய்யப்படும் என்று பதில் அளித்துள்ளார். மேலும் இந்த கட்டிடம் சம்பந்தமான தகவல்களை அளிப்பதில் பொதுத்தகவல் அலுவலர் மற்றும் செயற்பொறியாளர், மண்டலம் 7 மற்றும் வருவாய்த்துறையினர் தயக்கம் காட்டுகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

ஆகவே மாண்புமிகு செயலாளர் அவர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.37, எமரால்ட் தெரு, கொளத்தூர், சென்னை–99ல் உள்ள கட்டிடத்தின் கட்டிட திட்ட அனுமதி சான்றிதழ் மற்றும் சொத்துவரி விவரங்களை தங்களின் விசாரணையின் போது தங்களிடம் செயற்பொறியாளர் அவர்களும், வருவாய்த்துறை அதிகாரிகள் அவர்களும் சமர்ப்பிக்க வேண்டும். அப்படி சமர்ப்பிக்க இயலாத பட்சத்தில் செயற்பொறியாளர், வருவாய்த்துறை மற்றும் கட்டிடம், கட்டிட உரிமையாளர் மீது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.''

2) மனுதாரர்கள் தாங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் அளித்த மனுவிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் பொது தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், சந்தேகம் அளிக்கும் விதமாக பதிலளித்திருப்பதால், கட்டிட திட்ட அனுமதி சான்றிதழ் மற்றும் சொத்து வரி விவரங்களை அளிக்க உத்திரவிட கோரி இம்முறைமன்றத்தை அணுகியுள்ளனர்.

3) மேற்கண்ட மனுதாரர்களின் கோரிக்கையினை ஆய்வு செய்ததில், மனுதாரர்களின் கோரிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் தொடர்புடையதாக இருப்பதாலும், மேலும் மனுதாரரின் கோரிக்கை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றச்சட்டம் மற்றும் விதிகளின் வரம்பிற்குள் வராததாலும் மனுதரார்களின் மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை இல்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருவாளர்கள் M.ஜாகீர் உசேன் மற்றும்
ர.சாஜித் பாஷா,
புதிய எண்.24, பழைய எண். 4/11,
புனித ஜார்ஜ் கான்வெண்ட் தெரு,
செனாய் நகர்,
சென்னை–600 030.

2) மண்டல அலுவலர்,
   மண்டலம் 7,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   திருவள்ளூர் நெடுஞ்சாலை,
   Opp-Dunlop,
   சென்னை– 600 053.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032